ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1814/39 - 2013 ජූනි මස 12 වැනි බදාදා - 2013.06.12

*1814/39 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்***
***(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)***

***வதிவற்றோர் வசமுள்ள அசையாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு வதிவுள்ளோருக்கு அனுமதியளித்தல்***

(1) காலத்திற்குக் காலம் விதிக்கப்பட்ட அசையாத சொத்துக்களை கொள்வனவு செய்தல், உரிமையாக்குதல் மற்றும் உடமையில் வைத்திருப்பதற்கு ஏற்புடைத்தான சட்டவிதிகளுக்கு உட்பட்டு, பிரிவு 7 (அ) வின் கீழ் இலங்கையில் வதியும் ஒருவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஒரு நபருக்கு இலங்கை ரூபாவில் கொடுக்கல்களை மேற்கொள்வதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுகிறது. அத்தகைய சொத்தின் உரிமையாளர் அல்லது அவரின் வாரிசு இலங்கைக்கு வெளியே வதியுமிடத்து இலங்கையிலுள்ள அத்தகைய அசையாச் சொத்துக்களின் விற்பனை தொடர்பான கொடுப்பனவில் கணிசமானளவு கவனம் செலுத்தப்படும்.

(2) இந்த பணிப்புரையின் நோக்கத்திற்காக –

(அ) ''அசையாத சொத்து'' என்பது காணி மற்றும் கட்டடங்கள் எனப் பொருள்படும் ;

(ஆ) ''இலங்கையில் வதியும் ஆள்'' அல்லது ''இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்'' என்பது செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 37 (1) இன் கீழ் நிதி அமைச்சினால் விடுக்கப்பட்டு, 21 ஏப்பிறல் 1972 ஆம் திகதி வர்த்தமானி இலக்கம் 15007 இல் வெளியிடப்பட்ட பணிப்புரையில் வழங்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(3) 2003.10.28 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 312/9 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

பி. எச். ஓ சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2013, யூன் 12.

6-761